| O.S.No. 100/2024 | PW1: திருமதி. மீனாட்சி<br>க/பெ. திரு. நடராஜன் | 06-11-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் பிறந்து வளர்ந்து ஊர் வடமணபாக்கம். நான் 8-ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். மகளிர் சங்கத்தில் இருககிறேன். அது இல்லாமல் ஏரி வேலைக்கு செல்வேன். மாதம் எனக்கு சுமார் ரூ.3,000/- வருமானம் வரும். ஏரி வேலை தவிர்த்து நெசவு தொழில் தரிப்பாவு செய்து தருவேன். நான் சீட்டு பிடிப்பேன் என்றால் இல்லை. பிரதிவாதி எனது வீட்டிற்கு 4 வீடுகள் தள்ளி உள்ளதன் அடிப்படையில் எனக்கு தெரியும். பிரதிவாதி பெருமாள்தாங்கல் கிராமத்தில் கிராம உதவியாளராக வேலை செய்கிறார். பிரதிவாதி வீட்டில் அவரது மனைவி, மகன், மகள் உள்ளனர். பிரதிவாதியின் மனைவி தனியார் பள்ளியில் வேலை செய்கிறார். பிரதிவாதியும் அவரது மனைவியும் எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது.

2. பிரதிவாதி என்ன தேவைக்காக பணம் கேட்டார் என்றால் வீடு கட்டுவதற்காக பணம் வேண்டும் என்று என்னை நச்சரித்தார். பிரதிவாதி மாடி வீட்டில்தான் வசித்து வருகிறார். பொதுவாக கடன் கொடுத்தால் கடன் வாங்கியவரின் வீட்டில் சாட்சி கையொப்பம் பெறுவது வழக்கம் என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதி வாங்கிய கடனை கொடுக்காததால் 6 மாதம் கழித்து அவரது மனைவியிடம் போய் கேட்டேன். பாண்டினை பிரதிவாதிதான் எழுதினார். பாண்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையதுதான். பாண்டில் சாட்சி கையெழுத்தினை மோகன் மற்றும் கணேசன் போட்டனர். மோகன் எனக்கு உறவினர் இல்லை, அவரது பூர்வீகம் சித்தாத்தூர். கணேசன் எனது தந்தை. வழக்கறிஞர் அறிவிப்பினை பார்த்துதான் கையெழுத்து போட்டேன்.

3. பிரதிவாதியும் அவரது மனைவியும் வீட்டில் இல்லை என்பதை தெரிந்தே நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கும் அவரது மனைவிக்கும் போதுமான வருமானம் உள்ளது என்றாலும், அதனால் அவர் என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் 2016-ம் ஆண்டு முதல் 2020-ம் ஆண்டு வரை சீட்டு நடத்தினேன் என்றாலும், அப்போது பிரதிவாதி எனக்கு பொறுப்பிற்காக பாண்டு எழுதிக்கொடுத்தார் என்றாலும், அந்த சீட்டு முடிந்ததற்கு பிறகு அதை நான் கிழித்து போட்டுவிட்டு ஒரு போர்ஜரியான பாண்டினை உருவாக்கி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியிடம் நான் கடன் கேட்டேன் என்றாலும், அவர் கடன் கொடுக்கவில்லை என்பதால் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மகளிர் குழுவில் வங்கியில் கடன் பெற்று கடனை கட்டுவதுதான் வழக்கம். பிரதிவாதிக்கு சொந்த வீடு உள்ளது என்பதால் அவர் வீடு கட்டுவதற்காக என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.06 18:44:18 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**